Available online at: http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
IJMASRI, Vol. 3, issue 1, pp. 532-. -534
https://doi.org/10.53633/ijmasri

INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)

ISSN: 2582-9130 IBI IMPACT FACTOR 1.5 DOI: 10.53633/IJMASRI

RESEARCH ARTICLE

# சம்புவராயர் கல்வெட்டுகளில் வணிகம்

**முனைவர். கோ.ரங்கராஜன்**

*உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை, கலைஞர் கருணாநிதி, அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை.*

**ஆய்வுச் சுருக்கம்**

இந்தியா ஒரு பழம்பெரும் நாடு, இப்பழம்பெறும் நாட்டின் ஒரு பகுதியான தமிழகத்தில் பல்வேறு பேரரசுகள் பொருளாதார துறையில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக பாடுபட்டன. குறிப்பாக பல்லவர்கள் பாண்டியர்கள் சோழர்கள் ஆட்சி காலத்தில் பொருளாதாரம் மிகவும் சிறப்பாக இருந்தது என்பதை அறிகிறோம். அதுபொல் சோழர்களின் கீழ் குறுநில மன்னர்களாக விளங்கிய சம்புவராயர்களும் வளர்ச்சிக்காக பாடுபட்டனர்.

சோழப் பேரரசு என்னும் பெரும் மாளிகையை உருவாக்குவதில் தங்களை ஒப்படைத்துக் கொண்டு அம்மாளிகையை தாங்கும் தூண்களாக விளங்கிய பல சிற்றரசுக் குடும்பங்களில் சம்புவராயர் குடும்பமும் ஒன்றாகும். சம்புவராய மன்னர்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள படைவீடு என்ற இடத்தை தங்களின் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்தார்கள். இம்மன்னர்கள் காலத்தில் விவசாயம், தொழில்கள் மற்றும் வணிகம் வளர்ச்சியடைந்து.

சம்புவராய மன்னர்கள் வணிகர்த்திற்கு மிகவும் அக்கறை காட்டினார்கள். இம்மன்னர்கள் தங்களின் ஆட்சிக்கு உட்பட்ட பல ஊர்களில் வணிகர்களை குடியமர்த்தினர்.[1] இதே போல வெளிநாட்டு வணிகத்திலும் முழுக்கவனம் செலுத்தியுள்ளனர். மாமல்லபுரத்திற்கு அருகே தற்போது சத்ராஸ் என்றழைக்கப்படும் ஊர் சம்புவராயர்களின் ஆட்சிக்காலத்தில் இராசநாராயணன் பட்டிணம் என்ற பெயரில் சிறந்த கடற்கரை வாணிப நகரமாக விளங்கியது என முதலாம் இராசநாராயண சம்புவராயரின் 16-வது ஆட்சி ஆண்டு கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது.[2]

## முன்னுரை

### வணிகர்களின் புகலிடம் :

சம்புவராய மன்னர்கள், போர்காலங்களில் வணிகர்களின் வாழ்வும் அவர்களின் வணிகமும் சீரழிவுக்கு உள்ளாகாதவாறு அவர்களை பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தினர். கொத்தமங்கலம், கீழ்மின்னல் ஆகிய ஊர்களில் வென்று மண்கொண்ட சம்புவராயர் காலத்தில் குடியமர்த்தப்பட்டனர். இவ்வணிகர்கள் குடியமர்த்தப்பட்ட இடத்திற்கு அஞ்சினான் புகலிடம் என்று அழைக்கப்பட்டது.[3] இதனை கல்வெட்டு சான்றுகள் புலப்படுத்துகின்றது.

சம்புவராய மன்னர்கள் காலத்தில் செட்டிக் கைக்கோளர் வணிகர், உறைகாரர், வடவாணிகர் சாலியர், கூறைவடவாணிகர், செக்கு வாணிகர்,



©2023 by KRISHMA PUBLICATION 

கோலியர், சேனியர், பள்ளிகள் ஆகியோர் வாணிகம் செய்பவர்களாக இருந்து வந்தனர் என்பதை கல்வெட்டு வாயிலாக அறியலாம். இவர்களில் கைகோளர், சாலியர், கோலியர் ஆகியோர் தறிநெசவு செய்து துணி உற்பத்தி செய்பவர்கள். ஆவர். கூறைவடவாணிகர் என்போர் நெய்த துணிகளை விற்பணை செய்தும் வந்தனர். இதனால் இவ்வணிகர்களை ஜவுளி வணிகர் என்று கூறுவர். செக்குவணிகர்கள் எண்ணெய் போன்ற பலபொருட்களை கொண்டுவந்து ஓரிடத்தில் நிலையாக வைத்துக் கொண்டு விற்பனை செய்யும் மளிகைக்கடை வணிகர் எனலாம். பள்ளிகள் எனும் வணிகர்கள் மலை மற்றும் காடுகளில் வேட்டையாடுவதில் கிடைக்கும் பொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்து வந்தனர். இடையர்கள் ஆடு, மாடுகளை வளர்த்து விற்பனை செய்யும் கால்நடை வணிகர்கள் ஆவர். கோயிலங்காடி என்போர் கோயில் பூசை மற்றும் வழிபாட்டு பொருட்களை விற்பனை செய்யும் வணிகர்கள் ஆவார்கள். இதனால் இவ்வணிகர்கள் சிறுகடை வைத்திருக்கும் வணிகர்கள் என்று கூறுவர்.[4]

உறைகாரர் என்போர் பொன்னை உரசிப்பார்த்து தரம்கூறும் பொன்வணிகர் என்று கூறலாம். சேனியர்கள் எண்ணெய் வித்துகளோடு தொடர்புடைய எண்ணெய் வாணிகர் ஆவார்கள். வெற்றிலை வாணிபம் செய்பவர்களை சேனையங்காடி என்று அழைத்தனர். மேற்குறிப்பிட்ட வணிகம் சம்புவராய மன்னர்கள் காலத்தில் நடந்து வந்தது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறகின்றனர்.

வணிக பெருங்குடி மக்கள் அனைவருமே கோயிலை நடுமையமாக கொண்டு நான்கு புறங்களிலும் இவர்களுக்கென்று அமைக்கப்பட்டிருந்த பெருந்தெருக்களில் குடியமர்த்தப்பட்டனர். இப்பகுதி திருமடைவிளாகம் என்றும் திருவீதிகள் என்றும் அழைக்கப்பட்டது. இவர்கள் வாழும் பகுதியில் நான்கு திசையிலும் எல்லைகளை அளந்து எல்லைகற்கள் நடப்பட்டன. தெருக்கள் குடிமனை இலக்கணப்படி அமைக்கப்பட்டன. மன்னர்களால் தனியாக அமைக்கப்பட்ட தெருக்களுக்கு மன்னர்கள் தங்கள் பெயரை சூட்டினார்கள்.[3]

சம்புவராய மன்னர்கள் காலத்தில் வாழ்ந்த வணிகப் பெருங்குடி மக்கள் தங்களின் வணிகப் பொருட்களை விற்பணை செய்யும் பொருட்டு நாட்டின் பல ஊர்களுக்கும் இடம் விட்டு இடம் சென்று வணிகம் செய்து வந்தனர். அவ்வாறு வணிகம் செய்த ஊர்கள் பின்வருமாறு.

செங்கை அண்ணா மாவட்டத்தில் உள்ள கொத்தமங்கலம், சத்ராஸ், நெரும்பூர், திருவடிசூலம், மானம்பாதி ஆகிய ஊர்கள் செங்கை வட்டத்தில் உள்ளன. திருவானைக்கோயில் உத்திரமேரூர் ஆகிய ஊர்களும் உத்திரமேரூர் வட்டத்தில் உள்ளது. அரசக்கோயில், புலிப்பார்க்கோயில் மதுராந்தக வட்டத்தில் அமைந்துள்ளன. பெருநகர் காஞ்சிபுரத்திலிருந்து செங்கற்பட்டு செல்லும் வழியில் 22 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. வடாற்காடு மாவட்டம் வாலாஜபேட்டை வட்டத்தில் உள்ள வேப்பூர் கீழ்மின்னல், வந்தவாசி வட்டத்தில் உள்ள கீழ்கொடுங்காலூர், குடியாத்தம் வட்டத்தில் உள்ள வேப்பூர், கடநகரம், போ;ர் வட்டத்தில் உள்ள வடமகாதேவ மங்கலம், வசூர், செய்யாறு வட்டத்தில் உள்ள திருவோத்தூர் வேலூர் மாவட்டத்திலுள்ள விரிஞ்சபுரம் போன்ற பகுதிகளில் வணிகம் மேற்கொண்டு உள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் திண்டிவனம், நெற்குணம் திருவெண்ணைநல்லூர், கோலியனூர் உள்ளிட்ட அனைத்து ஊர்களிலும் வணிகப் பெருங்குடி மக்கள் வாழ்ந்து வணிகம் செய்தனர் என்பதை சான்றுகள் மூலம் அறியலாம்.[6]

ஏகாம்பரநாதன் குலசேகர சம்புவராயரின் இரண்டு கல்வெட்டுக்கள், வென்று மண்கொண்ட சம்புவராயரின் நான்கு கல்வெட்டுக்கள், முதலாம் இராசநாராயணன் சம்புவராயரின் பன்னிரண்டு கல்வெட்டுக்கள், இரண்டாம் இராசநாராயண சம்புவராயரின் இரண்டு கல்வெட்டுகள், மூன்றாம் இராசநாராயண சம்புவராயரின் பத்து கல்வெட்டுகள், பெயர் குறிப்பிடாத சம்புவராயரின் இரண்டு கல்வெட்டுக்கள் ஆகமொத்தம் 32 கல்வெட்டுக்கள் இச்சம்புவராயரின் ஆட்சி காலத்தில் வணிகம் வளர்ந்த இடங்களைப் பற்றியும் வணிகக் குடும்பங்கள் குடியமர்த்தப்பபட்ட முறையினைப் பற்றியும் எடுத்து இயம்புகின்றன.[7]

சம்புவராயர்களின் காலத்தில் பட்டணம் என்பது வணிக நகரமாக விளங்கியிருக்கிறது. இங்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் ஏறுசாத்து இறக்குசாத்து என்றும் கூறுவர். விரிப்பன மடிப்பன (துணிமூட்டைகள்), நிறுப்பன அளப்பன (தானியவகைகள்) முகப்பன (எண்ணெய் வகைகள்) ஆகியவற்றின் மீது வரிகள் விதிக்கப்பட்டன. மேலும் தரகு உள்ளாயம், அழுகல் சரக்கு காய்கறி மீது விதிக்கப்படும் வரி அங்காடிப்பாட்டம் என குறிப்பிடப்பட்டுள்ளது. கடைகளில் பொருட்களை வைத்துக்கொண்டு வியாபாரம் செய்யும் சாலையோர வியாபாரிகள் மீது வரி விதிக்கப்பட்டன. தானிய வகைகள், எண்ணெய் வகைகள், பழவகைகள், காய்கறிப் போன்ற பொருட்களையும் ஏற்றுமதி இறக்குமதி செய்தனர்.[8]

**வீரசம்பன் பணம்**

சம்புவராய மன்னர்களின் ஆட்சிகாலத்தில் பணம், கழஞ்சு, வராகன் போன்றவை புழக்கத்தில்

இருந்தன. மேலும் இம்மன்னர்கள் காசுகளை அச்சடித்து வெளியிட்டனர். இவ்வாறு காசு அச்சடித்து வெளியிட்ட மன்னர் வீரசம்பன் ஆவார். இவரது ஆட்சிக்காலம் கி.பி. 1306 முதல் 1317 வரையாகும்.[9]

சம்புவராய மன்னர்கள் பெயரளவிற்கு பாண்டியர்களின் கீழ் சிற்றரசராக இருந்த போதிலும் பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைந்திருந்ததை வீரசம்பன் வெளியிட்ட பணத்தின் வாயிலாக அறியலாம். இது அவரது பெயராலே வீரசம்பன் பணம் (அ) குளிகை என்று அழைக்கப்பட்டது. ஆனால் இப்பணத்தைப் பற்றி இம்மன்னரின் கல்வெட்டு குறிப்பில் காணப்படவில்லை. இருப்பின் இப்பணத்தைப் பற்றிய குறிப்பு இவருக்கு பின் ஆட்சிக்கு வந்த வென்ற மண்கொடை சம்புவராயரின் 17வது ஆட்சி ஆண்டு கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டிருகின்றது. குடியாத்தம் வட்டம் காங்கேயநல்லூரில் இக்கல்வெட்டு கிடைத்திருக்கின்றது. அக்கல்வெட்டுல் நல்ல பணம் வாசிபடா வீரசம்பன் குளிகை என எழுதப்பட்டிருக்கிறது.[10] செய்யாறு வட்டம் உக்கலிலுள்ள முதலாம் இராசநாராயணன் சம்புவராயரின் கல்வெட்டு இப்பணத்தை,

**“அன்றாடு வழங்கும் வாசிபடா வராகன்
நற்பணம் வீரசம்பன் குளிகை”**

என்று கூறுகிறது.[11]

வராகன் என்று சொல் தங்கத்தால் செய்யப்பட்ட காசு என்பதை தெரிவிக்கிறது. சம்புவராயர்கள் மட்டுமின்றி, பாண்டிய மன்னர்களும் இந்தப் பணத்தையே பயன்படுத்தினர் என்று அறிகிறோம். தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திருவதிகையில் உள்ள மாறவர்மன் ஸ்ரீவல்லபன் (1307- 1342) என்பவரின் 33-வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டும்,[12] திருக்கோவிலூர் வட்டம் திருவெண்ணெய் நல்லூரிலுள்ள மாறவர்மன் வீரபாண்டியனின் 19-வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு வீரசம்பன் பணம் பற்றி குறிப்பிடுகிறது.[13]

இதிலிருந்து நோக்கும் போது பாண்டிய மன்னர்களின் புகழும் அதிகாரமும் நலிந்த நிலையில் இருந்திருக்க வேண்டும். இதன் காரணமாக தங்களுக்கு முன்னர் சிற்றரசர்களாக விளங்கிய சம்புவராயர்கள் வெளியிட்ட பணத்தை பாண்டியர்கள் பயன்படுத்தினர் என்பதை அறியமுடிகிறது.

பாண்டியர்கள் மட்டுமல்லாது சம்புவராயர்களை வென்று அவர்கள் நாட்டைக் கைப்பற்றிக் கொண்ட கம்பணானும் இப்பணத்தையே பயன்படுத்தியுள்ளனர். தான் கைப்பற்றிய நாட்டில் தனது நாணய முறையை புகுத்தாமல் முன்னர் வழக்கத்திலிருந்த வீரசம்பன் பணத்தையே உபயோகித்தார் என்பதை கல்வெட்டு மூலம் அறியலாம்.[14]

படைவீட்டில் எழுதப்பட்டுள்ள இரண்டாம் புக்கனின் கி.பி. 1403-வது ஆண்டு வெளியிட்ட கல்வெட்டு இடையர்கள் தங்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கு ½ வீரசம்பன் பணம் வீதம் ஒதுக்கப்பட்டு, படைவீட்டில் இருக்கும் அத்திமலைப் பெருமாள் கோயிலுக்கு வழிபாடு நடத்தினார்கள் என்பதை அறியமுடிகிறது.[15]

## துணை நூற்பட்டியல்


1 கோ. தங்கவேலு, சம்புவராயர் வரலாறு, கோபால் நாரயணன் பதிப்பகம், சென்னை, 1990, ப. 148.
2 யு.சு.நு.இ 1932-33இ ழே 103.
3 கோ. தங்கவேலு, மேலே சுட்டப்பட்டது, ப. 158.
4 மேலது, ப.64.
5 யு.சு.நு.இ 1926இ ழே 499.
6 மேலது, ப.எண். 148-49, 530.
7 கோ.தங்கவேலு, மேலே சுட்டப்பட்டது, பக். 532-33.
8 மேலது, பக். 155-156.
9 யு.சு.நு.இ 1887இ ழே. 24இ
10 யு.சு.நு.இ 1939-40இ ழே. 162இ
11 யு.சு.நு.இ 1932-33இ ழே. 202இ
12 யு.சு.நு.இ 1921இ ழே. 491இ
13 யு.சு.நு.இ 1905இ ழே. 386இ
14 கோ.தங்கவேலு, மேலே சுட்டப்பட்டது. பு.162.
15 யு.சு.நு.இ 1921இ ழே. 373இ


*****



©2023 by KRISHMA PUBLICATION